## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.98-2025 **LW.11 ADDL.1 PW.3**

| Name | திரு.முருகேசன்<br>உதவி ஆய்வாளர் | Father / Husband Name | அமனமுத்து |
|---|---|---|---|
| Village | தௌார்செங்கமேடு | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 60 |
| | | Time | 1.00 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 18.06.2026 நாளாகிய இன்று திரு..M.ஆசிப் முகமது பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்,**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது பெண்ணாடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த திரு.சரவணன் சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.பாக்கியராஜ் ஆகியோர்களுடன் பணி புரிந்த காரணத்தினாலும், அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் மற்றும் ஆவணங்களின்அடிப்படையிலும் நான் சாட்சியம்அளிக்கிறேன்.

2. கடந்த 17–03–2025 அன்று காலை 9.00 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சரவணன்நிலைய பொறுப்பில் இருந்தபோது திட்டக்குடி வட்டம் டி. அகரம் கிராமத்தைசேர்ந்த சுரேந்தர் ( எ) பூவேந்திரன் த–பெ.கிங்.பாரிவள்ளல் என்பவர் நியைம் ஆஜராகிகொடுத்த புகாரினை பெற்று காவல்நிலைய குற்ற எண்.71–2025, ச.பி.296(பி), 118(1), 351(3) பி.எண்.எஸ் ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். 17–03.2025 தேதியிட்ட புகார் **அ.சா.2,** 17–03.2025 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை **அசா.ஆ.3** ஆகும். மேலும் அவர் பெற்ற புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் திட்டக்குடி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். இத்துடன்அவர் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.பாக்கியராஜ் அவர்களின் பார்வைக்குவைத்துள்ளார்.

3.உதவி ஆய்வாளர் திரு.பாக்கியராஜ்அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 மணியளவிலல் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்புசாமி, சிவபாலன் இவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகசர்தயார்செய்துள்ளார். 17–03–2025 தேதியிட்ட மாதிரி வரைபடமும், பார்வை மகசர் முறையே **அசா.ஆ.4, அசா.ஆ.5** ஆகும். மேலும் வழக்கின் சாட்சிகளான பூவேந்திரன், ஊமைதுரை,

அசோக்ராஜ், சந்தோஷ்ராஜ், கிங்பாரிவள்ளல், கருப்புசாமி, சிவபாலன் இவர்களை தனி தனியே விசாரணைசெய்து வாக்குமூலம்பதிவுசெய்துள்ளார். சாட்சிகளை விசாரணைசெய்தபோது சம்பவம் உண்மை என தெரிந்ததால் இவ்வழக்கின் எதிரியை தேடியபோது இவ்வழக்கின் எதிரியை **17.03.2025** அன்று **12.30** மணியளவில் ஊமைதுரை வீட்டின்அருகே எதிரியை கைதுசெய்து பின்பு நிலையம் கொண்டுவந்து திரேக பரிசோதனைசெய்து பாராக்காவல் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். மேலும்அசா.1 க்கு சிகிச்சை அளித்த அரசு உதவி மருத்துவர் திரு.அறிவுசெல்வம் என்பவரை விசாரித்து அவர் அளித்துள்ள காயச்சான்றை பெற்று புலன் விசாரணையில் இணைத்துள்ளார். அசா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அசா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை மாற்றம்செய்து பிரிவு மாற்றுஅறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளார். அசா.1 ன் காயச்சான்றிதழ் **அ.,சா.ஆ6** ஆகும். பிரிவு மாற்று அறிக்கை **அசா.ஆ.7** ஆகும். இறுதியில் எதிரிகளின் மீது ச.பி.**296**(பி), **118(2)**, **351(3)** பி.எண்.எஸ் ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல்தகவல் அறிக்கை பதிவு,செய்துள்ளார் என்று சொன்னால் ? சரியல்ல.

2. இவ்வழக்கிற்கு உண்டான அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்திலேயே தயார்செய்யப்பட்டது என்று சொன்னால் ?சரியல்ல.

3 சாட்சிகளை சரிவர விசாரணைசெய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளார் என்று சொன்னால் ? சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI